கூடுதல் தலைமைச் செயலர்/
ஆணையர் (வ.வ.)

- 4 மே 2017

எழிலகம், சென்னை-600 005

<u>சுருக்கம்</u>

தமிழ்நாடு கேளிக்கைகள் வரிச் சட்டம், 1939 – திரைப்படங்கள் – கேளிக்கை வரி விலக்களிக்க அமைக்கப்பட்ட குழுவின் பரிந்துரையை ஏற்று, தேர்தல் ரத்து செய்யப்பட்டுள்ள டாக்டர் ராதாகிருஷ்ணன் நகர் சட்டமன்ற தொகுதியில், **"அய்யனார் வீதி"** தமிழ் திரைப்படத்திற்கு கேளிக்கை வரிவிலக்கு அளித்து – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**<u>வணிகவரி மற்றும் பதிவு (சி1) த்துறை</u>**

**அரசாணை (டி) எண். 196**

**நாள்: 02.05.2017**
**ஹேவிளம்பி, சித்திரை–19,**
**திருவள்ளுவர் ஆண்டு, 2048**
**படிக்கப்பட்டது:–**

1. அரசாணை (டி) எண்.120, வணிகவரி மற்றும் பதிவுத் (சி1) துறை, நாள் 17.03.2017.
2. அரசாணை (டி) எண்.158, வணிகவரி மற்றும் பதிவுத் (சி1) துறை, நாள் 06.04.2017.
3. திருவாளர். ஸ்ரீ சாய் சண்முகர் பிக்சர்ஸ் நிறுவனத்தாரின் 25.04.2017–ஆம் நாளிட்ட கடிதம்.

-----

**<u>ஆணை:–</u>**

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், கேளிக்கை வரி விலக்களிக்க அமைக்கப்பட்ட குழுவின், பார்வையிட்ட அனைத்து உறுப்பினர்களின் பரிந்துரையை ஏற்றும், பொதுத் (தேர்தல்) துறை வழங்கிய இசைவின் அடிப்படையிலும், தேர்தல் நடைபெறவுள்ள சென்னை மாவட்டம் தவிர்த்து தமிழகத்தின் பிற மாவட்டங்களில், **"அய்யனார் வீதி"** தமிழ் திரைப்படத்திற்கு கேளிக்கை வரியிலிருந்து விலக்களித்து ஆணையிடப்பட்டுள்ளது.

2. மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், கேளிக்கை வரி விலக்களிக்க அமைக்கப்பட்ட குழுவின் பார்வையிட்ட அனைத்து உறுப்பினர்களின் பரிந்துரையை ஏற்றும், பொதுத் (தேர்தல்) துறை வழங்கிய இசைவின் அடிப்படையிலும், தேர்தல் நடைபெறவுள்ள டாக்டர் ராதாகிருஷ்ணன் நகர் சட்டமன்ற தொகுதி தவிர்த்து சென்னை மாவட்டத்தின் பிற பகுதிகளில், **"அய்யனார் வீதி"** தமிழ் திரைப்படத்திற்கு கேளிக்கை வரியிலிருந்து விலக்களித்து ஆணையிடப்பட்டுள்ளது.

3. திருவாளர். ஸ்ரீ சாய் சண்முகர் பிக்சர்ஸ் நிறுவனத்தார் மூன்றாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில், **"அய்யனார் வீதி"** தமிழ் திரைப்படத்திற்கு, சட்டமன்ற இடைத்தேர்தல் ரத்து செய்யப்பட்டுள்ள டாக்டர் ராதாகிருஷ்ணன் நகர் சட்டமன்ற தொகுதியிலும் **"அய்யனார் வீதி"** தமிழ் திரைப்படத்திற்கு கேளிக்கை வரி விலக்களிக்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

4. இந்நிலையில், **"அய்யனார் வீதி"** திரைப்படத்தின் தயாரிப்பாளர் கேட்டுக் கொண்டதற்கிணங்க, தமிழ்நாடு கேளிக்கைகள் வரிச் சட்டம், 1939–ன் பிரிவு 8, உட்பிரிவு 2–ல் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை பயன்படுத்தி, சட்டமன்ற இடைத்தேர்தல் ரத்து செய்யப்பட்டுள்ள டாக்டர் ராதாகிருஷ்ணன் நகர் சட்டமன்ற தொகுதியிலும் **"அய்யனார் வீதி"** தமிழ் திரைப்படத்திற்கு ஆணையிடப்படும் நாள் முதல் கேளிக்கை வரியிலிருந்து விலக்களித்து அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

முனைவர் ச.சந்திரமௌலி,
கூடுதல் தலைமைச் செயலாளர் (முகூபொ)

<u>பெறுநர்</u>
கூடுதல் தலைமைச் செயலாளர்/ வணிகவரி ஆணையர், சேப்பாக்கம், சென்னை–5.
செயலாளர், தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை, சென்னை–9.
இயக்குநர், தமிழ்வளர்ச்சி துறை, சென்னை–8.
சம்பந்தப்பட்ட படத்தயாரிப்பாளர்.

<u>நகல்:</u>
சிறப்பு நேர்முக உதவியாளர்,
அமைச்சர் (வணிகவரி) அலுவலகம், சென்னை–9.
வணிகவரி மற்றும் பதிவு (அநமு) பிரிவு, சென்னை–9.
இருப்புக்கோப்பு / உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

செ. முரளி கிருஷ்ணன்
பிரிவு அலுவலர். 2.5.17

2/5/17